# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2015.03.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# தொலைத் தொடர்பு அறவீடு (திருத்தம்)

**2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : *இவ் வாசகம் 2014 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க,தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது முற்கொடுப்பனவு சேவைகள் தொடர்பில் விடயத்திற்கேற்ப இயக்குநர்கள் மற்றும் பெறுநர்களின்மீது அறவீடொன்றை விதிப்பதற்கும் 2015, ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து அறவீடுகளின் விதிக்கப்படற்பாலதான தன்மையின் காலப்பகுதியை நீடிப்பதற்கானதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறவீட்டின் கொடுப்பனவுக்கான தேதியை அல்லது காலப்பகுதியை குறித்துரைப்பதற்கு கட்டளையொன்றை அமைச்சர் ஆக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கானதாகும்.*

***வாசகம் 4*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முற்கொடுப்பனவு சேவைகளின் மீது இயக்குநர்களினால் செலுத்தப்பட்ட அறவீட்டை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வதற்கானதாகும்.*

# தொலைத் தொடர்பு அறவீடு (திருத்தம்)

*ச.வ.ஒ. 15/2015*

## *2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** 2014 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டத்தினால் கடைசியாக திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

> "2.(1) (இதனகத்துப்பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொலைத் தொடர்பு அறவீடு என அழைக்கப்படும் அறவீடொன்று (இதனகத்துப்பின்னர் "பெறுநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் தொலைத் தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வொரு ஆளிடமிருந்தும், ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அப்பெறுநருக்கு இயக்குநரினால் வழங்கப்பட்ட தொலைத் தொடர்பு சேவைகளின் வழங்கலின் பெறுமதிமீது பின்வருமாறு விதிப்பனவு செய்யப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்:-
>
> > (அ) 2011 ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காக இருபதுசத வீதப்படி;

2-PL 008876 -450 (2015/03)

(ஆ) 2013 ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2014, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான காலப் பகுதிக்காக-

(i) இணையச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதிமீது பத்து சதவீதம் என்ற வீதத்தில்; அத்துடன்

(ii) இணையச் சேவைகள் தவிர்ந்த தொலைத் தொடர்பு சேவைகளின் வழங்குதலின் பெறுமதிமீது இருபத்தைந்து சதவீதம் என்ற வீதத்தில்;

(இ) 2014 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்றதும் ஆனால் 2015, ஏப்பிரல் 1 ஆந் தேதிக்கு முன்னரான காலப் பகுதிக்காக-

(i) இணையச் சேவைகளின் வழங்கலின் பெறுமதிமீது பத்து சதவீதம் என்ற வீதத்தில் ; அத்துடன்

(ii) இணையச் சேவைகள் தவிர்ந்த தொலைத் தொடர்பாடல் சேவைகளின் வழங்கலின் பெறுமதியின் மீது இருபத்தைந்து சதவீதம் என்ற வீதத்தில்;

(ஈ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப் பகுதிக்காக-

(i) பிற்கொடுப்பனவு மற்றும் முற்கொடுப்பனவுச் சேவைகள் ஆகிய இரண்டிற்

கும், இணையச் சேவைகளின் வழங்கு கையின் பெறுமதியின்மீது பத்து சத வீதத்தில் ; அத்துடன்

(ii) பிற்கொடுப்பனவுச் சேவைகளுக்காக, இணையச் சேவைகள் தவிர்ந்த தொலைத் தொடர்புச் சேவைகளின் வழங்குகையின் பெறுமதியின் மீது இருபத்தைந்து சதவீதத்தில்.

*(2)* எவரேனும் பெறுநருக்கானமுற்கொடுப்பனவுச் சேவையாக இணையச் சேவை தவிர்ந்த தொலைத் தொடர்புச் சேவையை வழங்கும் ஒவ்வோர் இயக்குனரிடமிருந்தும் ஒவ்வொருமாதம் தொடர்பிலும் அப்பெறுநருக்கான அத்தகைய தொலைத் தொடர்புச் சேவையின் வழங்குகையின் பெறுமதியின் மீது, 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காகவும், பிரிவு 2அ வின் கீழ் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதி அல்லது காலப்பகுதி வரையும் உட்பிரிவு *(1)* இல் குறிப்பீடு செய்யப்பட்ட இருபத்தைந்து சதவீதப்படியான அறவீடு விதிப்பனவு செய்யப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.

*(3)* இரண்டாம் உட்பிரிவின் ஏதேனும் நோக்கங்களுக்காக அத்தகைய தேதி அல்லது காலப்பகுதி குறித்துரைக்கப்பட்டிருக்கு மிடத்து, அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட அத்தேதியி லிருந்து வலுவுக்குவருமாறு, முற்கொடுப்பனவுச் சேவையொன் றாக, இணையச் சேவை தவிர்ந்த, தொலைத் தொடர்புச் சேவையைப் பெறுகின்ற ஒவ்வொரு பெறுநரிடமிருந்தும் அறவீடானது அறவிடப்படுதல் வேண்டும்.

*(4)* உட்பிரிவு *(1)*, *(2)* மற்றும் *(3)* இன் ஏற்பாடுகள், 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த ஒழுங்கமைப்புக்கு அல்லது தனி யாளுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்த ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு அல்லது தனியாளுக்கு ஏற்புடையனவாத லாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைஉடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"அறவீட்டுக் கொடுப்பனவின் தேதியொன்றை அல்லது காலப் பகுதியை அமைச்சர் குறித்துரைக்கலாம்.*

2அ.(1) அமைச்சர் கட்டளை மூலம், 2ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட அறவீட்டுக் கொடுப்பனவின் தேதியை அல்லது காலப்பகுதியைக் குறித்துரைக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையானது அமைச்சர் தமது கையொப்பத்தை அதில் பொறிப்பதன் மேல் உடனடியாக நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் வசதியானளவு விரைவாக வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் அதன் பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய ஏதேனும் கட்டளை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாதவிடத்து, அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து அது இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச்சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"3. பிரிவு 2(1) இன் கீழ் சேகரிக்கப்பட்ட அறவீடும் மற்றும் பிரிவு 2 (2) இன் கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடும் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்

தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் உரிமமளிக்கப் பட்ட இயக்குநர்களினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ்த் தாபிக்கப் பட்ட இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு (இதனகத்துப்பின்னர் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு மாதத்தின் முடிவிலிருந்தும் பதினைந்து நாட்களினுள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகையவிபரங்களுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்:

ஆயின், விலைப்பட்டிகள் வழங்குவதற்குமுன்னர் அல்லது விலைப்பட்டிகள் வழங்காமல் அறவீடு சேகரிக்கப் படுமிடத்து, 2014, மே மாதம் 1 ஆந் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு -

(அ) அந்த மாதத்தின் முதலாம் நாளிலிருந்து தொடங்கி பதினைந்தாம் நாள் வரையுமான காலப் பகுதிக்காக சேகரிக்கப்பட்ட அத்தகைய அறவீடு அம்மாதத்தின் இருபதாம் தேதியன்று அல்லது அதன் முன்னர் அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அந்த மாதத்தின் பதினாறாம் நாளிலிருந்து தொடங்கி இறுதி வரையான காலப் பகுதிக்காக சேகரிக்கப்பட்ட அத்தகைய அறவீடு அடுத்து வருகின்ற மாதத்தின் 5 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.”.

செல்லுபடியாக்குதல்.

**5**. 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் புறக்குறிப்பிடப்படும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது இயக்குநரினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 2(1) (ஈ)

மற்றும் பிரிவு 2 (2) என்பவற்றின்கீழ் விதிக்கப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட அறவீட்டுத் தொகையானது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் செல்லுபடியானதாக விதிக்கப்பட்டதாகவும் சேகரிக்கப்பட்டதாகவும் எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலே சொல்லப்பட்ட ஏற்பாடுகள் நீதின்றத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது அக்காலப்பகுதியின் போது விதிக்கப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் நடவடிக்கை முறைகளைப் பாதித்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்